# செப்டம்பர்



# 9. சுகம் தரும் பாதை

## முன்னுரை

செப்டம்பர் மாதம் என்பது தமிழகத்திற்கு ஒரு சிறப்பான மாதம் என்றே சொல்ல வேண்டும். அகில உலக திருஅவை "அன்னை மரியாவின் பிறப்பு விழா"வைச் சிறப்பிக்கிற செப்டம்பர் எட்டாம் தேதியை ஆரோக்கிய அன்னையின் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்வது நமக்குக் கிடைத்திருக்கும் தனிப்பெரும்பேறு. ஆம், அன்னை மரியா நற்சுகம் தரும் அன்னையாய் நமக்குக் காட்சி தருகிறார். அந்த ஆரோக்கிய அன்னையின் மாதத்தில் நாம் செய்யவிருக்கும் இந்தத் திருச்சிலுவைப் பாதை "சுகம் தரும் சிலுவைப் பாதையாய்" அமையட்டும். அன்னையின் ஆற்றல் மிகு பரிந்துரையால் பலரது நோய்கள் நீங்கி நற்சுகம் வாய்க்கப் பெற்றாலும், சுகம் தருபவரும், நலம் அருள்பவரும் ஆண்டவராம் இயேசு ஒருவரே என்பதில் ஐயமிருக்க வாய்ப்பில்லை. திருவிவிலியம் கூறுகிறது. "மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார். நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர் தம் காயங்களால் நாம் குணமடைகிறோம்." (எசா. 53:4,5) நம் ஆண்டவராம் இயேசு பாடுபட்ட ஒவ்வொரு தலத்திலும், அவர் நமக்காகவே வேதனை அனுபவித்தார், நம்மை நலமாக்கவே அவர் நலிவுற்றார் என்பதை உணர்வதுடன், நமக்கு ஏற்படும் நோய்களை நாம் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார் என்பதையும் கற்றுக்கொள்ள முயலுவோம். வாருங்கள் சுகம் தரும் பாதையில் இயேசுவோடு பயணிப்போம்.

### ✦ முதல் நிலை

## சூழ்நிலைக் கைதியாய் இயேசு

பிலாத்துவின் முன் கைதியாய் காட்சி தரும் இயேசு, நோயினால் சூழ்நிலைக் கைதியாய் உணருகிற நமக்கு

மவுனமாய் ஒரு போதனை செய்கிறார். நோயினின்றும் பிணியினின்றும் நமக்கு விடுதலை அளிப்பதற்காகவே தம் விடுதலையைத் துறந்து மரண தண்டனையையும் எதிர்ப்பின்றி ஏற்கிறார்.

“நான் என்ன பாவம் செய்தேன்? எனக்கு ஏன் இந்த நோய் வந்தது? எல்லா முன்னெச்சரிக்கைகளையும் எடுத்து வந்த எனக்கு எப்படி இந்தத் தொற்று ஏற்பட்டது? நேரிய வாழ்க்கை வாழ்ந்து வருகிற எனக்கு எப்படி இந்தப் பிணி உண்டாயிற்று?” என எண்ணற்ற கேள்விகள் எழுப்பும் நமக்கு இந்தத்தலம் பதிலளிக்கிறது.

எந்தத் தவறும் செய்யாதவராகவும், எந்தக் குற்றமும் புரியாதவராகவும் இயேசு இருந்த போதிலும் இயேசு நமக்காக இந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்கிறார். நம்மை வாட்டி வதைக்கும் நோய்களுக்குக் காரணங்களைத் தேடிக் களைத்துப்போன நமக்கு இயேசு சொல்லுகிற பதில் பிறவிக் குருடனைக் குறித்து அவர் சொன்ன அதே பதில் தான். இது “இவர் செய்த பாவமும் அல்ல; இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல; கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டு இப்படி நிகழ்ந்தது.” (யோவா. 9:3)

நோய்கள் கடவுளின் தண்டனை என்கிற எதிர்மறையான எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு, இந்த நோயின் வழியாக இறைவன் நம் வாழ்வில் ஏதோ ஒரு மாற்றத்தை, நல்வாழ்வுக்கான மாற்றத்தைக் கொண்டுவர இருக்கிறார் என நம்புவோம். பிலாத்துவின் முன் இயேசு கைதியாய் நின்றது புரியாத புதிராய் அப்போது தோன்றினாலும், இப்போது அதன் அவசியம் புரிகிறது அல்லவா? அதுபோலவே, நம் நோய்களுக்கான இறைவனின் திருவுளம் மெல்லத் தெரியவரும். அதுவரை சுகமாக்கும் கடவுள் முன் சரணாகதி அடைவோம்.

## செபம்

இயேசுவே! நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே என்மீது இரங்கும்.

◆

✦ இரண்டாம் நிலை

# சிலுவை சுமப்பவராய் இயேசு

நாம் சுமக்கும் நோய்களென்னும் சுமைகளை இறக்கவே பாரச்சிலுவையை இயேசு சுமக்கிறார். தாளாச் சிலுவையைத் துணிவுடன் ஏற்கிறார்.

என் வயதுக்கு ஏற்ற நோயா இது? என் பொருளாதாரப் பின்னணி ஈடு கொடுக்கக் கூடியதா இந்த வியாதி? இந்தப் பிணியையும் இதனால் எனக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பொருளாதாரச் சுமையையும் எப்படித் தாங்கிக் கொள்ளப்போகிறேன் எனக் கேட்கும் நமக்கு சிலுவை சுமக்கும் இயேசு அறிவுரை தருகிறார் இத்தலத்தில்.

“ஐயா, தண்ணீர் கலங்கும்போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை. நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கி விடுகிறார்” (யோவா. 5:7) என்று புலம்பிக் கொண்டு முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்த ஒருவரை நோக்கி இயேசு கேட்ட அதே கேள்வியைத்தான் நம்மைப் பார்த்தும் கேட்கிறார்: “நலம் பெற விரும்புகிறீரா?” (யோவா. 5:6)

நோயினின்று விடுபட முதன்மையாகவும், அடிப்படையாகவும் தேவைப்படுவது “நலம்பெற வேண்டும்” என்கிற துடிப்பான விருப்பம். “நலம் பெறுவேன்” என்கின்ற உயிரூட்டமான நம்பிக்கை. சிலுவையின் தோற்றத்தையும் அதன் பளுவையும் பார்த்த இயேசுவுக்கு அதனைத் தாம் எப்படிச் சுமக்கப் போகிறோம் என்கின்ற கேள்வி நிச்சயமாக

எழுந்திருக்கும். ஆனால், எப்படியும் சுமந்தே தீருவேன் என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றியே தீருவேன் என்கின்ற அவரது மனஉறுதி அவரை சிலுவை சுமக்க வைத்தது. அதற்கான தெம்பையும் கொடுத்தது.

இயேசுவின் துணையோடு நாம் எதிர்கொள்ள முடியாத நோயும் இல்லை; வெல்ல முடியாத வியாதியும் இல்லை. நோயென்னும் சிலுவையை இயேசுவோடு சுமக்கப் பழகுவோம். அவரைப்போல் நிச்சயமாய் வெல்வோம்.

**செபம்**

இயேசுவே! நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே! என் மீது இரங்கும்.

◆

✦ **மூன்றாம் நிலை**

## தரையில் விழுந்த இயேசு

தரையில் விழுந்து கிடக்கும் இயேசு, நாம் விழுந்து விடக்கூடாது என்பதையும், விழுந்தாலும் விழுந்தே கிடக்கக் கூடாது என்பதையும், தமது தணியாத தாகமாய்க் கொண்டுள்ளார். எனவேதான் தரணியை ஆளும் தெய்வமாய் இருந்தாலும் தரையில் விழுந்து கிடக்கிறார்.

இதுவரை ஏற்பட்ட நோய்களுக்கு, நானே நேரில் சென்று, மருத்துவரைச் சந்தித்து, பரிசோதனைகளைச் செய்து, சிகிச்சைகளை மேற்கொண்டு சமாளித்து விட்டேன். இப்போது எழுந்து நடக்கக் கூட முடியாமல் வலுவிழந்து போய்விட்டேனே என அங்கலாய்க்கும் நமக்கு இந்தத் தலம் ஆறுதல் அளிக்கிறது.

அகிலம் படைத்த ஆண்டவனின் மகனே என்றாலும் அவரும் வலுவிழந்து போகிற நேரங்கள் உண்டு. ஆனால் அவை நிலையானவையும் அல்ல, நிரந்தரமானவையும் அல்ல.

இயேசு தாமாகவே எழுந்து நடந்தது போலவே நம்மாலும் எழுந்து நடக்க முடியும். "இதுவும் கடந்து போகும்" என்கிற துணிவோடு நோயை எதிர்கொள்ளுகிறபோது வியாதி நம்மிடமிருந்து விரட்டப்படும்.

தமது சொந்த ஊரில் முடக்குவாதமுற்ற ஒருவரைப் பார்த்து, இயேசு கூறிய வார்த்தைகளைத் தான் நம்மைப் பார்த்தும் சொல்லுகிறார். "நீ எழுந்து உன்னுடைய கட்டிலைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் போ" (மத். 9:6). நோயுறும் போது மற்றவர்களின் உதவி அவசியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மற்றவர்களின் உதவியையே எதிர்பார்த்திருந்து மனவலிமையற்றவர்களாய் முடங்கிவிடக்கூடாது. சுயமுயற்சியும், சுய முனைப்பும் இல்லையெனில் சுகம் பெறுதல் சிரமமாகிவிடும். தாமே எழுந்து நடந்த இயேசுவைப் பின்பற்றி நாமும் எழுந்து நடக்கப் பயிலுவோம்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

✦ **நான்காம் நிலை**

# தாயைச் சந்தித்த இயேசு

சிலுவைப் பாடுகளின் போது, தம் தாயைச் சந்தித்த இயேசு, நமக்காகவே அந்தத் துயரை அனுபவித்தார். நாம் சந்திக்கத் தயங்கும் நிஜங்கள், நபர்கள் மற்றும் சூழ்நிலைகளை சந்திப்பதற்கான திடத்தைத் தந்திடவே இயேசு தம் தாயை சோகமான இச்சூழலில் சந்திக்கின்றார்.

எனக்கு இந்த நோய் இருக்கிறது என்பதை எப்படி நான் மற்றவர்களிடம் சொல்வேன்? அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த வியாதியின்

தீவிரத்தைக் குறித்து எனக்கு நெருக்கமானவர்களிடம் எப்படிக் கூறுவேன்? அவர்களால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா? என்றெல்லாம் குமுறுகிற நமக்கு இந்தத் தலம் ஒரு உண்மையை உணர்த்துகிறது.

தாம் போதித்துக் கொண்டும், சாதித்துக் கொண்டும் இருந்த நாட்களிலேயே தம் தாயையும் சகோதரர்களையும் சந்திப்பதைத் தவிர்த்த இயேசு, தாம் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் தம் தாயைச் சந்திக்க விரும்பியிருக்க மாட்டார் என்றுதான் நம்பத் தோன்றுகிறது. ஆனால், அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. சில நிதர்சனமான நிஜங்களை நாம் சந்தித்துத்தான் ஆக வேண்டும். அந்த சந்திப்புக்குப் பிறகு, எங்கிருந்தோ ஒரு புது ஆற்றல் கிடைத்தது போன்ற உணர்வோடு இயேசு தம் பயணத்தைத் தொடர்கிறார்.

எனக்கு ஏற்பட்டிருக்கும் இந்நிலையை எப்படி எனக்கு நெருக்கமானவர்களுக்கு தெரிவிப்பது எனத் தயங்கும் நமக்கு, இரத்தப் போக்குடைய பெண்ணைப் பார்த்துப் பேசிய வார்த்தைகளையே இயேசு பேசுகிறார், “என்னைத் தொட்டது யார்?.. யாரோ ஒருவர் என்னைத் தொட்டார். என்னிடமிருந்து வல்லமை வெளியேறியதை உணர்ந்தேன்.” (லூக். 8:45, 46) தயங்கித் தயங்கி ஆண்டவரின் ஆடையைத் தொட்டப் பெண்ணுக்கு குணமளிக்கும் வல்லமை வெளிப்பட்டது போல நமக்கும் வெளிப்படும். மூடி மறைப்பதைத் தவிர்த்துவிட்டு நிஜங்களைத் துணிவுடன் சந்திப்போம். அப்போது உறவினரின் உறுதுணையோடும், ஆண்டவரின் அருட்துணையோடும், அன்னையின் பரிந்துரையோடும் அற்புதங்களைச் சந்திப்போம்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால், நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

# உதவி வேண்டி நிற்கும் இயேசு

சீமோனின் உதவி நாடி நிற்கும் இயேசு, நமக்கும் வாழ்வில் பிறரது உதவி தேவை என்பதை உணர்த்துகிறார். அப்படி உதவி தேவைப்படும் போது, ஆண்டவர் தாமே, நேரடியாகவோ, பிறர் மூலமாகவோ உதவி நல்குவர் என்பதை எண்பிக்கவே, இந்தத் தலத்தில் சீரேன் ஊரானாகிய சீமோனின் உதவியை இயேசு ஏற்றுக் கொள்கிறார்.

“எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்?” எனச் சில சமயங்களில் நாம் கூனிக் குறுகிப் போகிறோம். அரிய பெரிய காரியங்களையெல்லாம் செய்து பழகிய நாம் நோய் வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்கிறபோது, சின்னச் சின்னக் காரியங்களுக்குக்கூட பிறரது உதவியை நம்பியிருக்க வேண்டிய சூழல் ஏற்படும்போது, ஒருவித சலிப்பும், ஏன், கசப்புணர்வும்கூட நம்மில் ஏற்படலாம். அத்தகு தருணங்களில் நம்மைத் திடப்படுத்தும் தலம் இது.

ஒரு வார்த்தையாலே புயலை அடக்கிய இயேசு, தன் கை அசைவாலே ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு உணவைப் பகிர்ந்தளித்த இறைமகன், ஒரு வழிப்போக்கனின் உதவியை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டவில்லை. இதுதான் வாழ்க்கையின் யதார்த்தம்.

உதவி பெறுவதை அவமானமாய்க் கருதும் நம்மில் சிலருக்கு, இயேசுவின் பணிவாழ்வில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் திடனளிக்கும். “முடக்குவாதமுற்ற ஒருவரை நால்வர் சுமந்து, அவரிடம் கொண்டு வந்தனர்.. வீட்டின் கூரையை உடைத்துத் திறப்பு உண்டாக்கி, முடக்குவாதமுற்றவரை படுக்கையோடு கீழே இறக்கினர். இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு” (மாற். 2:3-5) அந்த முடக்குவாதமுற்றவரை குணமாக்கினார்.

பிறரது உதவி மூடப்பட்ட கதவுகளை நமக்கு திறந்துவிடும். அடைக்கப்பட்ட ஆசீர்வாதங்களை நமக்கு அள்ளித்தரும் என்பதை உணர்வோம். சீமோனின் உதவியை ஏற்கத் தயங்காத இயேசுவிடமிருந்து, பிறர் தருகிற செப உதவி, பொருள் உதவி, உடல் உதவி ஆகியவற்றை ஏற்றிடக் கற்றுக் கொள்வோம். நோயினின்று நலம் பெற பிறரது அக்கறை பேருதவியாய் அமைந்திடும்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என்மீது இரங்கும்.

◆

✦ **ஆறாம் நிலை**

## துகிலில் முகம் பதித்த இயேசு

வெரோனிக்காவின் துகிலில் தம் முகத்தை இயேசு பதித்ததன் மூலம், மனிதரில் சிலரது செயல்கள் நம்மை வியக்க வைக்கக் கூடியவை என்பதனை நிரூபிக்கிறார். இரத்தம் கசிந்த தம் திருமுகத்தைத் துடைத்த வெரோனிக்காவை மெச்சும்விதமாக இயேசு செய்த இந்தச் செயல் நம்மைச் சுற்றியுள்ள நல்லவர்களை நமக்கு நினைவூட்டுவதோடு, அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாய் நாம் இருக்கவும் அழைப்பு விடுக்கிறது.

நூற்றுவர் தலைவர் ஒருவர் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு யூதரின் மூப்பர்களை அவரிடம் அனுப்பித் தம் பணியாளரைக் காப்பாற்ற வருமாறு வேண்டினார். அவர்கள் இயேசுவிடம் வந்து “நீர் இவ்வுதவி செய்வதற்கு அவர் தகுதியுள்ளவரே, அவர் நம் மக்கள் மீது அன்புள்ளவர் என்றனர்.” (லூக். 7:3,4) இயேசுவும் அந்த நூற்றுவர் தலைவரின் பணியாளரை ஒரு சொல்லாலே குணமாக்கியதை விவிலியத்தில் பார்க்கின்றோம்.

நற்குணமும், நன்றியுணர்வும் நலம் பெறுவதற்கு மிகவும் அவசியமானவை. நோய் நம்மை வாட்டுகிறபோது, எரிச்சலும், கோபமும், சலிப்பும், சஞ்சலமுமே நமக்குள் பெருக்கெடுக்கும். ஆனால், நிதானமாய்ப் பார்த்தால் நம்மைச் சுற்றி நல்லவர்கள் பலர் இருப்பதைக் காண முடியும். நம் அருகிலேயே கண் விழித்துப் பணிவிடை செய்கிற உறவு, அங்கும் இங்கும் அலைந்து திரியும் நட்பு, காவல் தெய்வங்களாய் இருந்து கருத்துடன் கண்காணிக்கும் செவிலியர், தக்க சமயத்தில் சரியான சிகிச்சை தரும் மருத்துவர்கள், தொற்றுக் காலத்திலும் தம்முயிரை துச்சமெனக் கருதி அரும்பணியாற்றும் மருத்துவப் பணியாளர்கள் என எத்தனையோ பேர்! இவர்கள் எல்லாம் இல்லையெனில் நம்மில் எத்தனை பேர் இன்று நலமாய் இருப்போம் என்பதே ஒரு கேள்விக்குறி. அவர்களையெல்லாம் நன்றியோடு நினைத்துப் பார்ப்போம்.

சொல்லொண்ணாத் துயரை அனுபவித்த போதும்கூட, வெரோனிக்காவின் இரக்கச் செயலை பாராட்டும் விதமாக, தன் திருமுகத்தைப் பதித்து நன்றி தெரிவித்த இயேசுவைப் போல நாமும் நன்றி பாராட்டப் பழகுவோம். நன்றியுள்ளவர்களும் நற்குணம் படைத்தவர்களும் விரைவில் நற்சுகம் பெறுவர். இது திண்ணம்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் - நான் சுகம் பெறுவேன்.
இயேசுவே, என்மீது இரங்கும்.

◆

✦ **ஏழாம் நிலை**

## மீண்டும் விழுகிற இயேசு

மீண்டும் விழுந்து அவமானப்படும் இயேசு, நோயில் விழுந்து, சில நேரங்களில், அவமானங்களைச் சந்திக்கும்

நமக்கு ஆறுதலாய் அமைகிறார். இரண்டாம் முறை விழுந்த இயேசுவை இரக்கத்தோடு அணுகி, அவரைத் தூக்கி, விடுவதற்குப் பதிலாக, அவரை இழித்துரைத்தும், அடித்துத் துன்புறுத்தியும் அவமானப்படுத்தியிருக்கக்கூடும் அந்தக் காவலர்கள். நோயினால் நிந்தையுறும் நமக்குத் தேறுதலைத் தரவே இயேசு இந்த அவமானத்தை சந்திக்கிறார்.

நோய்வாய்ப்பட்டு அவதியுறும் வேளையில், ஆறுதலாய் ஒரு வார்த்தையும், தேறுதலாய் ஒரு தொடுதலும், அனுசரணையாய் ஓர் உடனிருப்பும் கிடைக்காதா என நாம் ஏங்குகையில், "இன்னும் இருந்து உயிர வாங்கிக்கிட்டு இருக்கிறதப் பாரு. சனியனோட படற அவஸ்தைக்கு அளவே இல்லை" என்றெல்லாம் நம்மைக்குறித்து நமக்கு நெருக்கமானவர்களும், நாம் யாரை நம்பினோமோ அவர்களும் சொல்லுகிறபோது நெஞ்சே வெடித்துவிடும் போலத்தான் இருக்கும்.

இயேசுவை அணுகி வந்த கனானேயப் பெண் இத்தகைய ஒரு அனுபவத்தையே அடைந்தாள். தன் மகளுக்காக இயேசுவைத் தொடர்ந்து வந்த அவரைப் பார்த்து, "பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல" (மத். 15:26) என்று இயேசு சொன்னபோதிலும், அந்தப்பெண் பொறுமை காத்ததோடு மட்டுமல்லாது, தனக்குப் பெருமையும், தேடிக் கொண்டார். இறுதியில் இயேசு "அம்மா, உமது நம்பிக்கை பெரிது; நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்." (மத். 15:28) என்றுரைத்து அருஞ்செயல் புரிந்தார்.

இறைமகனின் மனதையே இளக வைக்கக் கூடிய ஆற்றல் பொறுமைக்கு உண்டு. பொறுத்தார் பூமியாள்வார் என்பது பொய்க்காது. வசைபாடியவர்களே விழுந்து விழுந்து உபசரிக்கும் நாள் விரைவில் வரும். அவமானங்களையும் அமைதியாக சகிக்கத் தெரிந்தவர்களுக்கு உடல் மட்டுமல்ல, உள்ளமும் விரைவாகவே சுகம் பெறும்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

## ✦ எட்டாம் நிலை

# அறிவுரை கூறும் இயேசு

பாரச் சிலுவையைச் சுமந்துவந்த இயேசுவைப் பார்த்து எருசலேம் மகளிர் கண்ணீர் வடிக்க, அவர்களுக்கு அறிவுரை கூறுகிறார் இயேசு. “உங்களுக்காவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்” எனக் கூறும் இயேசு, நோயின் வேதனைக்காக அழுவதோடு நின்றுவிட்டால் அதில் பயனில்லை; நோய்களைத் தவிர்க்கவும், நோயினின்று விடுபடவும் தேவையானவற்றைச் செய்யவும் வேண்டிய அவசியத்தை கோடிட்டுக் காட்டுகிறார்.

தம்மால் உடல்நலம் அடைந்த ஒருவரைப் பார்த்து இயேசு சொன்ன வார்த்தைகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை “இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப்பாவம் செய்யாதீர்.” (யோவா. 5:14) நோய் மற்றும் வியாதியில் இருப்பவர்கள் சிலவற்றைத் தவிர்ப்பது அவசியம், சில கட்டுப்பாடுகளுடன் வாழ்வது அவசியம் என்பதை மருத்துவம் மட்டுமல்ல, ஆன்மீகமும் எடுத்துரைக்கத் தவறுவதில்லை. இல்லையெனில் அதிகக் கேடானது நிகழ்வதற்கும் வாய்ப்புண்டு என எச்சரிக்கவும் தவறுவதில்லை.

பல சமயங்களில், மருத்துவ ஆலோசனைகளை இம்மி பிறழாமல் பின்பற்றும் நாம் ஆன்மீக ஆலோசனைகளை மட்டும் சட்டையே செய்வதில்லை. உண்ணுகிற உணவிலும், செய்கிற செயலிலும், வாழ்க்கை முறையிலும் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ளுகிற நாம், மனதை மட்டும்

மாற்றுவதற்கு முயற்சி செய்வதே இல்லை. உடலுக்கு ஏற்றவையா எனத் தெரிவு செய்வதில் இருக்கும் தெளிவு ஆன்மாவுக்கு ஏற்றவையா, இறைவனுக்கு ஏற்றவையா என்பதில் மட்டும் இல்லாமல் போவது ஏன்?

திருவிவிலியம் தெளிவாகக் கூறுகிறது. "கொலை, விபச்சாரம், பரத்தமை, களவு, பொய்ச்சான்று, பழிப்புரை ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன. இவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன." (மத். 15:19,20) ஆன்மாவை மட்டுமல்ல உடலையும் சேர்த்தே பாதிக்கின்றன. உடல் நோய்கள் பலவற்றிற்கும் உளவியல் காரணங்கள் உள்ளன என்பது மருத்துவ ஆராய்ச்சிகள் கூறும் உண்மை. எருசலேம், மகளிருக்கு இயேசு அருளிய அறிவுரையைக் கேட்டு நம் பாவங்களுக்காக அழுவோம்; தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து கட்டுப்பாட்டுடன் வாழ்வோம். அப்போது உடல் சுகமும் நமக்கு வாய்க்கும்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

✦ **ஒன்பதாம் நிலை**

## மூன்றாம் முறை விழும் இயேசு

மூன்றாம் முறை விழுகிற இயேசு இடைவிடாத முயற்சியின் அவசியத்தை நமக்குக் கற்பிக்கிறார். தாய் மரியா, சீரேன் ஊரானாகிய சீமோன், வீரநங்கை வெரோனிக்கா ஆகியோரின் உதவியையும் மீறி மூன்றாம் முறை விழுந்த இயேசுவின் உடல் சோர்ந்து போயிருந்தது என்பது உண்மை. ஆனால், அவரது மனம் சோர்ந்ததாகத் தெரியவில்லை.

நோய்கள் நம்மை வாட்டுகிறபோது உடல் சோர்ந்து போவது இயற்கையே. ஆனால் உள்ளம் சோர்ந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். இயேசு எரிக்கோவை நெருங்கி வந்தபோது, வழியோரமாய் உட்கார்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்த பார்வையற்ற ஒருவர் இயேசுவின் இரக்கம் வேண்டிக் கூக்குரலிட்டார். அவரை மற்றவர்கள் அமைதியாய் இருக்கும்படி அதட்டினார்கள். "ஆனால், அவர் 'தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்' என்று இன்னும் உரக்கக் கத்தினார்." (லூக். 18:39) அதன் பயனாக, முழுப் பார்வையையும் பெற்று மகிழ்ந்தார் "உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" (லூக்: 18:42) என்கிற ஆசிமொழியோடு.

மருத்துவ முயற்சிகளில் தொய்வு ஏற்படும் சமயங்களிலும், குணமாகி வருகிற வேகம் சற்றுக் குறைகிற போதும், சுற்றி இருப்போரின் கரிசனை கடுப்பாக மாறும்போதும், மனந்தளராமல் இருக்க இந்தத் தலம் நம்மை அழைக்கின்றது. மூன்று முறை விழுந்தாலும், மீண்டும், மீண்டும் எழுந்த இயேசுவைப் போல், உள்ளம் உடைந்து போகாமல், நோயை எதிர்கொள்வோம். இறைவனை நோக்கி இடைவிடாது செபிப்போம். நிச்சயம் அற்புதங்கள் அரங்கேறும்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால், நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

### ✦ பத்தாம் நிலை

## பொலிவிழந்த இயேசு

ஆடைகள் களையப்பட்டு, அழகும் பொலிவும் இழந்தவராய் இயேசு அவமானப்பட்டு நிற்கின்றார். நோயின் தீவிரம் அதிகரிக்க

நேரிட்டால், விலகிடும் ஆடையை சரிசெய்யக்கூட முடியாத அவலநிலைக்கு நாம் சிலநேரம் ஆளாகக்கூடும். அப்போது ஏற்படுகிற அவமான உணர்வையும், அறுவறுக்கத்தக்க வெட்கத்தையும் இத்தலத்தில் அனுபவித்து இயேசு நமக்காக பாடுபடுகிறார்.

"நடந்தது என்னவென்று பார்க்க வந்த மக்கள்... அவர் ஆடையணிந்து அறிவுத் தெளிவுடன் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள்" (மாற். 5:15) என மாற்கு நற்செய்தி அலகையில் பிடியிலிருந்து விடுபட்ட ஒருவனின் கதையை விவரிக்கிறது. ஆனால் இந்நிகழ்வின் தொடக்கத்தில், அந்த மனிதன் தம்மையே காயப்படுத்தி வந்ததாகவும் "இயேசுவே, உன்தைக் கடவுளின் மகனே, உமக்கு இங்கு என்ன வேலை?... என்னை வதைக்க வேண்டாம்" (மாற். 5:7) என்று உரத்தக் குரலில் கத்தியதாகவும் திருவிவிலியம் பதிவு செய்கிறது.

அளவு கடந்த துன்பத்தை அனுபவிக்கும்போதும், அவமானத்தின் உச்சத்தில் இருக்கும் போதும், நாமும் நம்மையே வருத்திக் கொள்கிறோம் மனதளவில். யாருமே வேண்டாம், கடவுள் கூட வேண்டாம், 'என்னைத் தனியே விடுங்கள்' என நோயின் உக்கிரத்தில் நாம் சொல்ல நேரிடும். ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. "இந்த மனிதரை விட்டுப்போ" (மாற். 5:8) என எந்த நோய்க்கும் உத்தரவிடக்கூடிய ஆற்றல் படைத்த கடவுள் நம் கடவுள். ஆனால், அவர் நம் அனுமதி இருந்தால் மட்டுமே நம் வாழ்வில் நுழைவார்.

போலி வேடங்களைக் களைந்துவிட்டு நம் ஆண்டவர் முன் நம்மையே திறந்து காட்டுவோம். இயேசுவின் மேலாடைகளைக் களைந்த அந்தக் கயவர்களால், அவரது கனிவும் சாந்தமும் நிறைந்த இதயத்தைத் தொட முடியவில்லை. தம்மையே வெறுமையாக்கிய அந்தத் தெய்வத்தை நம் வாழ்வில் அனுமதிப்போம். பீடித்த பலவகை நோய்களும், பிடித்தப் பிசாசும் பறந்தோடுவதை அனுபவிப்போம்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

✦ **பதினொன்றாம் நிலை**

## சிலுவையில் அறையுண்ட இயேசு

கழுமரம் தன்னில் கட்டப்பட்டவராய், சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டவராய், இயேசு சொல்லொண்ணாக் கொடுமையை அனுபவிக்கிறார். யாராவது சூனியக் கட்டுகள் வைத்துவிட்டனரோ? காத்துக் கருப்பை நமக்கெதிராக ஏவிவிட்டனரோ? ஏன் இப்படி நடக்கிறது? எதனால் இப்படி வலிக்கிறது என்றே தெரியாமல் வேதனைப்படும் நம்மை, அக்கொடுமையினின்று விடுவிக்க இயேசு இத்தலத்தில் கட்டுண்டவராய் சிலுவையில் வேதனையுறுகிறார்.

கைகளை அசைக்க முடியாமலும், கால்களால் நடக்க முடியாமலும், முடங்கிப்போன மனிதரையும் "நான் உனக்குச் சொல்லுகிறேன், எழுந்து நட" (மாற். 2:11) "உமது கையை நீட்டும்" (மத். 12:13) எனக் கட்டளையிட வல்லவராய் இயேசு இருக்கிறார். தமது காயப்பட்ட கரங்களாலும், அவற்றிலிருந்து வடியும் இரத்தத்தினாலும் நம்மைக் கழுவி, நமக்கு நலமளிக்க வல்லவராய் இயேசு இருக்கிறார்.

"கட்டுகளை அவிழ்த்து அவனைப் போக விடுங்கள்" (யோவா. 11:44) எனச் சொல்லி நம்மைப் பீடித்திருக்கும் அனைத்துப் பிணிகளிலிருந்தும், கண்ணுக்குத் தெரியாத கிருமிகளாலும், கண்ணெதிரே இருக்கிற விஷமிகளாலும் நமக்கு ஏற்படும் அனைத்துத் தொற்றுகளிலிருந்தும், தொல்லைகளிலிருந்தும் நம்மை விடுவிக்க, நமக்கோர் ஆயுதம் உண்டென்றால் அதுதான் திருச்சிலுவை. அதில் அறையுண்ட ஆண்டவராம் இயேசு கிறிஸ்து அவரை நோக்கிச்

செல்வோம். “இயேசுவே, என் மீது இரங்கும்” என்று. இருந்த இடம் தெரியாமல் நோய்கள் மறைந்து போகும். கட்டுகள் காணாமல் போகும்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

✦ **பன்னிரண்டாம் நிலை**

# உயிரைத் துறக்கும் இயேசு

நம் அனைவருக்கும் வாழ்வு தருவதற்காகவே தம் இன்னுயிரைத் துறக்கிறார் இயேசு. “இனி எங்கள் கைகளில் ஒன்றுமில்லை; கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்” என்று சொல்லப்படுகிறபோதும், “இன்னும் எவ்வளவு காலம் என்று சொல்ல முடியாது; அவை நாட்களாகவும் இருக்கலாம்; மாதங்களாகவும் இருக்கலாம்; ஓரிரு வருடங்களாகவும் இருக்கலாம்” என்கிற வார்த்தைகளைக் கேட்கும்போதும், நோயாளியின் நெருங்கிய சொந்தங்களும், நோயாளியும் எந்த வேதனையை அனுபவிப்பார்களோ, அதே வேதனையைத்தான் தாய் மரியாவும் இயேசுவும் இந்தத் தலத்தில் அனுபவிக்கிறார்கள்.

மரணத்தைக் கண்டும், மரணத்துக்கு ஏதுவான துன்பங்களைக் கண்டும் மனமிரங்க முடியாதவர் அல்ல இயேசு. நயீன் என்னும் ஊருக்குச் சென்றபோது, தம் ஒரே மகனை இழந்து தவித்த விதவைத் தாயைக் கண்டதும் “ஆண்டவர் அவர்மீது பரிவுகொண்டு ‘அழாதீர்’ என்றார். (லூக். 7:13). அவரது நண்பர் இலாசர் இறந்தபோது “பாருங்கள் இலாசர் மேல் இவருக்கு எத்துணை அன்பு” (யோவா. 11:36) என்று யூதர்கள் பேசிக்கொள்ளும் அளவுக்கு இயேசு கண்ணீர் விட்டு அழுதார்.

நெருக்கடியான வேளைகளில் நம்மீது நெஞ்சுருக்கம் கொள்ளக் கூடியவர் நம் ஆண்டவர். நாம் வாழ்வதற்காகவே இறந்த அவர் நம்மைப் பார்த்துச் சொல்லுகிறார். “இந்நோய் சாவில் போய் முடியாது. கடவுளின் மாட்சி விளங்கவே இவன் நோயுற்றான்.” (யோவா. 11:4) எல்லோருக்கும் மரணம் உறுதி என்றாலும் எல்லா நோய்களும் மரணத்தில் முடிவதில்லை. மருத்துவர்கள் கைவிட்டிருந்தாலும் நம் உயிர் கடவுளின் கைகளில் உள்ளது. நமக்காக மரித்த இயேசு தாம் விரும்பும் வரை நம்மை வாழ வைப்பார் என்பதில் ஐயமில்லை. அவர் விரும்பும் வரை வாழ்வோம். அவர் விரும்பும் வகையில் வாழ்வோம். அவருக்காகவே வாழ்வோம்

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

✦ **பதின்மூன்றாம் நிலை**

# கலைந்த கனவுகளுடன் கன்னி மரியா

கலைந்த கனவுகளோடும், கவலை தோய்ந்த முகத்தோடும் காட்சி தரும் கன்னிமரியா நம்மைப் பார்த்து “கவலைப்படாதிருங்கள்” எனக் கனிவாகச் சொல்லுகிறார். தம் கணவரை ஏற்கனவே இழந்து, தம் ஒரே மகனையும் இப்போது இழந்து தவிக்கும் அன்னை மரியா துவண்டு போய்விடவில்லை. தம் மகன் இருந்த இடத்தில் நம்மையெல்லாம் வைத்து, கண்ணின் மணிபோலக் காக்கின்றார்.

காலத்தின் கட்டாயத்தாலும், கடவுளின் திருவுளத்தாலும் இயேசு இறந்தே போயிருந்தாலும், அவர் இன்றும் வாழ்கின்றார். நம்மை நலமாக்கக் காத்திருக்கின்றார். மரணத்தை வென்ற இயேசு, இம்மண்ணில் வாழ்ந்த போது மரித்தோரையும் உயிர் பிழைக்கச் செய்தவர்தானே!

“அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது தொழுகைக்கூடத் தலைவருடைய வீட்டிலிருந்து ஒருவர் வந்து ‘உம்முடைய மகள் இறந்துவிட்டாள், இனி போதகரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்’ என்றார். இதைக் கேட்ட இயேசு சிறுமியின் தந்தையைப் பார்த்து “அஞ்சாதீர், நம்பிக்கையோடு மட்டும் இரும்; அவள் பிழைப்பாள்” என்றார். (லூக். 8: 49,50) அவ்வண்ணமே நிகழ்ந்தது அச்சிறுமி உயிர்பிழைத்தாள்.

அதே வார்த்தைகளைத்தான் இன்றைக்கு நம்மையும் பார்த்து இயேசு கூறுகிறார். நிதர்சனமான நிலைமை எவ்வளவு கவலை தருவதாய் இருந்தாலும், நிலவுகின்றச் சூழல் எவ்வளவு இக்கட்டாக இருந்தாலும், நிஜமான நிலைமை எவ்வளவு நம்பிக்கையற்றதாய் இருந்தாலும், அன்னை மரியாவைப் போன்று கசப்பான நிஜத்தைக்கூட, துணிவான இதயத்தோடு ஏற்கும் மனத்திடன் நமக்கிருந்தால் எல்லாம் நலமாகும். ‘நம்பினார் கெடுவதில்லை’ இது நான்கு மறைத் தீர்ப்பு. ‘நம்பிக்கையினால் நீதிமான் பிழைப்பான்’ - இது நம்மறையின் அருள்வாக்கு. நம்பிக்கையோடு பயணிப்போம்; நலமாக வாழ்வோம்.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன்.
இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

✦ **பதினான்காம் நிலை**

## இரவல் கல்லறையில் இயேசு

இரவல் கல்லறையில் இருந்தபடி இயேசு சொல்கிறார் - இது இறுதியானது அல்ல. “நான் விரைவில் வருகிறேன்” (தி.வெ. 22:12) “அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்.” (தி.வெ. 21:5). கல்லறை என்பது முடிவுரை அல்ல என்பது கிறிஸ்துவின் வாழ்வில் எவ்வளவு உண்மையானதோ,

அவ்வளவு உண்மையானது ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும்.

‘ஆண்டவர் மட்டும் இருந்திருந்தால், அவர் மட்டும் கொஞ்சம் கருணை காட்டியிருந்தால் இந்த இழப்பு நேர்ந்திருக்காது; இந்த நோய் வென்றிருக்காது; இந்த நிலை ஏற்பட்டிருக்காது’ எனப் பல வேளைகளில் நாம் நொந்து போகிறோம். இலாசரின் சகோதரி மார்த்தா இப்படித்தான் நொந்து கொண்டாள். இயேசு அவரிடம் “உன் சகோதரன் உயிர்த்தெழுவான்” என்றார். (யோவா. 11:23)

அதெல்லாம் சரி, கடைசி நாளில் அவன் உயிர்த்தெழுவான் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இப்போது என் துயருக்கு என்ன விடை எனத் தவித்த மார்த்தாவிடம் மீண்டும் இயேசு சொன்னார், “உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.. உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார்” (யோவா. 11:25,26).

இத்தகு வார்த்தைகளால் துணிவூட்டிய இயேசு, இறந்து போய் விட்டதாய் கருதப்பட்டு, இடுகாட்டில் விடப்பட்ட இலாசரை உயிர்த்தெழச் செய்தார் என்பது விவிலிய சத்தியம். ‘எல்லாம் முடிந்து போனது. இனி நம்புவதற்கு ஒன்றுமில்லை’ என்று சொல்லக்கூடிய நிலைமையென்று ஒன்று இல்லவே இல்லை இயேசு இருக்கும்வரை. அவரால் நம்மை வாழ்விக்கவும் முடியும், எந்நிலையிலிருந்தும், எந்நோயிலிருந்தும் விடுவிக்கவும் முடியும்; வாழ்வின் போதும், வாழ்க்கைக்குப் பின்பும் நம்மை உயிர்ப்பிக்க அவரால் முடியும். ஏனெனில் உயிரும் உயிர்ப்பும் உண்மையுமான அவரை எந்தக் கல்லறையும் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

**செபம்**

இயேசுவே, நீர் விரும்பினால் நான் சுகம் பெறுவேன். இயேசுவே, என் மீது இரங்கும்.

◆

## முடிவுரை

நாம் கடந்து வந்த ஒவ்வொரு நிலையிலும் இயேசு எப்படி நமக்காகப் பாடுகளை அனுபவித்தார் என்பதையும், அவரது பாடுகளால் நாம் எப்படி நலமடைகிறோம் என்பதையும் தியானித்தோம். ஆண்டவரின் பாடுகள் நோய் தீர்க்கும் அருமருந்து மட்டுமல்ல, மனத்தெளிவும், உளத்திடமும் தருகிற நல்மந்திரம் என்பதை உணர்ந்திருப்போம். அந்த உணர்வோடு இயேசுவின் திருச்சிலுவையை உற்று நோக்குவோம். நாம் அனுபவிக்கும் துன்பங்களை, துயரங்களை, நோய் நோக்காடுகளை இயேசுவின் சிலுவையோடும் திருப்பாடுகளோடும் ஒன்றிணைக்கக் கற்றுக் கொள்வோம். அப்போது சுகம் பெறுவோம். இறைவனுக்குச் சித்தமானால் நோயினின்று பூரண விடுதலையையும், இல்லையெனில் நம் நோய்களைத் தாங்கிக் கொள்வதற்கான சக்தியையும் பெற்றுக் கொள்வோம். பாரமான சிலுவையைக்கூட மனவலிமையோடு எதிர்கொண்ட இயேசுவைப் போலவே, நோயென்னும் சிலுவையைத் துணிவோடு எதிர்கொள்வோம். வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்த இயேசு, நமக்கு நற்சுகமும் மனத்திடனும் தந்து ஆசீர்வதிப்பார்.

◆